## முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**PW 1– EA 2/24 in EP . No. 252/2019**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திருமதி.V.ஸ்ரீவித்யா, எம்.எல்., முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.பாலசுப்பிரமணியம் | தொழில் : |
| த/பெ. : திரு.பழனிசாமி | வயது : 53 |
| முகவரி : | |

**மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் மனுதாரர். எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 07.08.2014 | அசல் வழக்கு எண் 336/2014 என்ற வழக்கின் பிராது | சான்றிட்ட நகல் | **ம.சா.ஆ.1** |
| 2 | 17.01.2013 | எதிர்மனுதாரர்/வாதி பெயரில் உள்ள கிரய பத்திரம் | சான்றிட்ட நகல் | **ம.சா.ஆ.2** |
| 3 | 12.06.2009 | மனுதாரர் /1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் | **ம.சா.ஆ.3** |
| 4 | 12.04.2011 | மனுதாரர்/1ம் பிரதிவாதி ,2ம் பிரதிவாதி பெயரில் உள்ள தாவா சொத்தினை பொறுத்து நிறைவேற்றிக் கொடுத்த பொது அதிகார பத்திரம் | சான்றிட்ட நகல் | **ம.சா.ஆ.4** |
| 5 | 12.04.2011 | எதிர்மனுதாரர்/வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே நிறைவேற்றிக் கொண்ட சாட்டுரைக்கப்பட்ட தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் | சான்றிட்ட நகல் | **ம.சா.ஆ.5** |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 07.12.2012 | மனுதாரர்/1 ம் பிரதிவாதி ஷை வழக்கிற்கு முன்னரே மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.டி.மதன்பிரகாஷ் என்பவருக்கு எதிராக இம்மனு எதிர்மனுதாரர்/ஷை வழக்கின் வாதி திரு.கோவிந்தராஜ் ஜாயிண்ட் 1 சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருப்பூர் ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ.எண் 480/2012 என்ற வழக்கின் பிராது | சான்றிட்ட நகல் | **ம.சா.ஆ.6** |
| 7 | 06.01.2018 | அ.வ.எண் 336/2014 என்ற ஷை வழக்கில் இம்மாண்புமிகு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் | **ம.சா.ஆ.7** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SHREE VIDYA SARAVANAN

Digitally signed by V SHREE VIDYA SARAVANAN
Date: 2024.12.17 18:10:17 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.